   2. முறையற்ற நிலப்பயன்பாட்டினால் ஏற்படும் விளைவுகள் நான்கு எழுதுக.
   3. நிலத்தின் பயன்பாடுகள் ஐந்து தருக.

(3+4+5=12 புள்ளிகள்)

7. 1. மழைவீழ்ச்சி செயன்முறையில் உள்ளடங்கும் செயற்பாடுகள் மூன்று தருக.
   2. பிரதான நான்கு திசைகளையும் குறிப்பிடுக.
   3. வானிலை பற்றிய தகவல்களை அறிந்து கொள்வதினால் கிடைக்கும் பயன்கள் ஐந்து தருக.

(3+4+5=12 புள்ளிகள்)

www.lkedu.lk

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
Provincial Department of Education, Northern Province

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

தரம் - 06	செயன்முறை தொழில்நுட்ப திறன்–I,II	நேரம்: 2.00 மணித்தியாலங்கள்

பெயர் / சுட்டெண் .....

பகுதி-I

- **பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

01. எமது சுற்றுப்புற சூழலைக் கவர்ச்சிகரமாகப் பேணுவதன் மூலம் பெறக்கூடிய நன்மைகளில் ஒன்று
1. கவலை 2. கோபம் 3. மகிழ்ச்சி 4. வெறுப்பு

02. மூலிகைப் பயிர் தொகுதிக்குள் உள்ளடங்குபவை
1. வெண்டி, கோவா, கத்தரி 2. பாற்கிழங்கு, சேம்பு, கொடிக்கிழங்கு
3. பாவட்டை, கற்றாளை, திப்பிலி 4. மிளகு, இஞ்சி, மிளகாய்


03. தொங்கும் தாவரங்களுக்கு உதாரணம்,
1. கொடிரோசா, மணிவாழை 2. சைபிரஸ், இக்லோரா
3. மொண்டரிப்சூ, ஸ்பைடர்பிளாண்ட் 4. இழிசாந்திமம், ஜெர்பரா

04. பின்வருவனவற்றுள் சுவையூட்டி பயிராக அமைவது,
1. மிளகு 2. பாவட்டை 3. கொடிக்கிழங்கு 4. குரக்கன்

05. அரிசிமா, பாண் போன்றவற்றில் அடங்கும் பிரதான போசணைக் கூறு,
1. புரதம் 2. காபோவைதரேற் 3. கனியுப்பு 4. விற்றமின்

06. சமையலறைக்கான தளத்திட்டம் ஒன்றில்  எனும் குறியீடு குறிப்பது
1. சமையலறை சுவர் 2. சமையலறை யன்னல்
3. உணவு சமைக்கும் அலகு 4. உணவுக் களஞ்சியம்

07. கையால் துளையிடும் கருவியாக அமைவது
1. சுட்டியல் 2. குறடு 3. அரம் 4. துறப்பணம்

08. அருகில் தரப்பட்டுள்ள படத்தில் காட்டப்பட்டுள்ள பொருள் எது?

1. கவர் சுத்தியல் 2. துறப்பணம்
3. சீவுளி 4. தட்டுப்பொல்லு

09. ஸ்டென்சில் முறை அச்சு பதித்தல் பாவிக்கப்படும் சந்தர்ப்பம் பின்வருவனவற்றுள் எது?
1. உடை 2. போஸ்டர் 3. பெனர் 4. மேற்கூறிய யாவும்

10. கணினியில் வரைந்த படம் ஒன்றை சேமிப்பதற்கு பயன்படுத்தப்படும் கட்டளை,
1. New 2. Open 3. Save 4. Cut (10×2=20புள்ளி)

www.lkedu.lk

➢ **பொருத்தமான சொல்லை வைத்து இடைவெளி நிரப்புக.**

(பொலித்தீன், வெண்டி, மிளகு, சீவுளி, ஈஸ்ட், பற்றீரியா)

11. சுவைச் சரக்குகளில் ஒன்று ..... ஆகும்.

12. பலகைகளை மட்டப்படுத்துவதற்கு ..... பாவிக்கப்படுகிறது.

13. சிதைவடையாத கழிவுப் பொருள் ..... ஆகும்.

14. நேரடியாக பாத்திகளில் வித்துகளாக நடக்கூடிய பயிர் வகைகளுள் ஒன்று ..... ஆகும்.

15. நொதிக்கச் செய்யும் பொருள் ..... ஆகும்.

(5×1=5 புள்ளிகள்)

➢ **சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் அடையாளம் இடுக.**

16. மண்புழு மண்ணை தூர்வையாக்கும். ( )

17. மீன் தகரத்தில் அடைத்து பொதி செய்யும் உணவாகும். ( )

18. அரச வைத்தியசாலை இலாபநோக்க நிறுவனமாகும். ( )

19. சுயதொழில் ஒன்றைச் செய்வதால் மனிதனுக்கு சுய திருப்தி ஏற்படும். ( )

20. முறைசார்ந்த வடிவங்களுள் இலை வடிவம் ஒன்றாகும். ( )

(5×1=5 புள்ளிகள்)

www.lkedu.lk

பகுதி-II

- **விரும்பிய நான்கு வினாக்களுக்கு விடை தருக.**
- **(பட விளக்கம் எதிர்பார்க்கப்படும்)**

01. 1) வீட்டுத் தோட்டத்தில் தாவரங்களை வளர்ப்பதன் மூலம் கிடைக்கும் பண்புகள் 2தருக.
    2) கீரை வகைகள் 3 தருக?
    3) வெளிவரும் நாற்றம் காரணமாக பூச்சிகளை விரட்டும் தாவரங்கள் 3தருக.
    4) உயிரற்ற மூடுபடைகள் எவை? (2+3+3+2=10 புள்ளிகள்)

02. 1) சுட்டித் துண்டு ஒன்றில் உள்ளடக்க வேண்டிய அம்சங்கள் யாவை?
    2) போசணைக் கூறுகள் யாவை?
    3) நாம் உணவை உட்கொள்ள வேண்டிய அவசியம் யாது? (3+3+4=10 புள்ளிகள்)

03) 1) இரு பரிமாணத் தோற்றம் என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது யாது?
    2) முப்பரிமாண தோற்றம் உடைய பொருட்கள் 3தருக?
    3) கணினி திரையில் Home மெனுவில் உள்ள பின்வரும்
    Copy - தொழிற்பாடு யாது?
    Cut - தொழிற்பாடு யாது?

04) 1) குண்டூசி தாங்கி செய்வதற்குத் தேவையான பொருட்கள் யாவை?
    2) குண்டூசி தாங்கியின் மாதிரிப் படத்தை வரைந்து அளவுகள், உபகரணப் பொருட்களை குறித்துக் காட்டுக.
    3) படத்தை வரைந்து காட்டுக.

    அ) கைவாள்
    ஆ) கவர் சுத்தியல்
    இ) கைக்குறடு
    ஈ) மரவேலை உளி

    (2+4+4=10 புள்ளிகள்)

05) 1) அடிப்படைத் தேவைகள் யாவை?
    2) தேவைகளிற்கும் விருப்பங்களிற்கும் இடையிலான வேறுபாடுகள் 2 தருக.
    3) சேவைகள் நான்கு தருக. (2+4+4=10 புள்ளிகள்)

www.lkedu.lk

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
Provincial Department of Education, Northern Province

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

தரம் - 06	சைவநெறி – I,II	நேரம்: 2.00 மணித்தியாலங்கள்

பெயர் / சுட்டெண் .....

பகுதி - I

➢ **எல்லா வினாக்களுக்கும் விடை அளிக்க.**

01. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

01. "பிரணவப் பொருளாம் பெருந்தகை....." என்று "வெற்றிவேட்கை" எனும் நூலில் போற்றப்படுபவர்,
1. சிவபெருமான் 3. முருகப்பெருமான்
2. விநாயகப்பெருமான் 4. உமாதேவியார்

02. "அட்சரஅப்பியாசஆரம்பம்" என்று அழைக்கப்படும் வாழ்வியல் சடங்கு,
1. காதுகுத்தல் 2. சோறூட்டல்
3. ஏடு தொடக்குதல் 4. பெயர் சூட்டுதல்

03. தேவாரப்பாடல்கள் கண்டெடுக்கப்பட்டதிருத்தலம்,
1. திருநாரையூர் பொல்லாப் பிள்ளையார் 2. திருவீரட்டானம்
3. திருக்கோணேச்சரம் 4. சிதம்பரம்

04. பஞ்சபுராணம் ஓதமுன்பும் ஓதியபின்பும் சொல்லவேண்டியது,
1. திருச்சிற்றம்பலம் 2. சிவசிவ
2. நமசிவாய 4. இறைவாபோற்றி

05. "சீருந்திருவும் பொலியச் ....." எனத் தொடங்கும் பாடல்,
1. திருவாசகம் 2. திருவிசைப்பா
2. திருப்பல்லாண்டு 4. திருப்புராணம்

(5x2 =10 புள்ளிகள்)

02. தொடர்புபடுத்துக.

1.	முழுமுதற் கடவுள் சிவன்	இரண்டாம் பாடல்
2.	சிவசின்னங்கள்	சைவசமயத்தவர்
3.	ஆறுமுகநாவலர்	கைவிசேடம்
4.	கிராமியத் தெய்வம்	விபூதி, உருத்திராக்கம்
5.	சித்திரைப்புத்தாண்டு	ஐயனார்

(5x2 =10 புள்ளிகள்)

www.lkedu.lk

03. சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடைப்புக் குறியினுள் அடையாளமிடுக.

1. ஆலயம் சென்றுவழிபடுவதால் மனம் ஒருநிலைப்படும். ( )
2. சிவனடியார்களுக்கு அமுதூட்டும் பணியில் இளையான்குடிமாறநாயனார் ஈடுபட்டார். ( )
3. திருமுறைகள் பதினெட்டாகும். ( )
4. இலங்கையில் சீதையம்மன் ஆலயம் திருகோணமலையில் உள்ளது. ( )
5. ஞானப்பிரகாசமுனிவர் பசுவதைக்கு அஞ்சி தமிழகம் சென்றார். ( )

(5x2 =10 புள்ளிகள்)

04. பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்க.

(நிறைகுடம் /சண்டேஸ்வரர் / கிழக்கு / திருமுறைகள் / மாவிட்டபுரம்)

1. ஆலய வழிபாட்டில் இறுதியாக வழிபடும் தெய்வம் ..... ஆவார்.
2. திருஞானசம்பந்தரது தேவாரப் பாடல்கள் முதல் மூன்று ..... ஆகத் தொகுக்கப்பட்டுள்ளன.
3. விசேடதினங்களின் போது சைவர்கள் ..... வைப்பர்.
4 குதிரை முகம் நீங்கியதால் ..... என்ற பெயர் ஏற்பட்டது.
5. திருக்கோணேச்சரம் ..... மாகாணத்தில் அமைந்துள்ளது.

(5×2 =10 புள்ளிகள்)

www.lkedu.lk

பகுதி - II

➢ **முதலாம் வினா உட்பட எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. 1) பின்வரும் திருமுறைப் பாடல்களில் இரண்டினைப் பிழையற வரிக்கிரமமாக எழுதுக.
2) அதனைப் பாடியவர், பண் என்பவற்றைக் குறிப்பிடுக.
அ) "இடரினும் தளரினும் ..... "
ஆ) "ஓசையொலியெலாம் ....."
இ) "பித்தாப்பிறைசூடி ..... "
ஈ) "சீருந் திருவும் பொலிய....."

(6×2 =12 புள்ளிகள்)

02. 'விழுமியங்கள் வாழ்க்கைக்கு அவசியமானவை'

1. விழுமியங்கள் என்றால் என்ன?
2. விழுமியப் பண்புகள் இரண்டினை குறிப்பிடுக.
3. விழுமியப் பண்புகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் நாம் பெறும் பயன்கள் எவை?

(4+4+4) =12 புள்ளிகள்

03. 'தெய்வத்தன்மை பொருந்தியவை திருமுறைகளாகும்'

1. திருமுறைகளைத் தொகுத்தவர் பெயர் தருக.
2. திருமுறைப்பாடல்கள் பாடப்படும் சந்தர்ப்பங்கள் இரண்டினை குறிப்பிடுக.
3. சுந்தரமூர்த்தி நாயனார் ஆற்றிய அற்புதங்கள் நான்கு தருக.

(4+ 4 +4) =12 புள்ளிகள்)

04. 'இறைவனை மெய்யன்போடு வழிபடத்தூண்டுபவை விரதங்கள் '

1. விரதம் என்றால் என்ன?
2. முருகனுக்குரிய விரதங்கள் இரண்டினை தருக.
3. விரதங்கள் அனுட்டிக்கும் காலத்தில் பின்பற்றவேண்டிய நியதிகளைக் குறிப்பிடுக.

(4+ 4+4) =12 புள்ளிகள்

05. 'மெய்கண்ட சாஸ்திரங்கள் பதினான்கு ஆகும் '

1. பசுவிற்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் இரண்டு தருக.
2. பதி என்பதன் பொருள் யாது?
3. பதியின் இயல்புகள் எவை எனக் குறிப்பிடுக.

(4+ 4 +4) =12 புள்ளிகள்

06. 'உலகின் தொன்மையான வழிபாடு கிராமிய வழிபாடு ஆகும் '

1. கிராமிய வழிபாடு வேறு எவ்வாறு அழைக்கப்படும்?
2. கிராமியத் தெய்வங்கள் இரண்டு தருக.
3. நீர் அறிந்த கிராமிய வழிபாட்டு முறைபற்றி சுருக்கமாகக் குறிப்பிடுக.

(4+ 4 +4) =12 புள்ளிகள்

07. பின்வரும் தலைப்புக்களில் இரண்டினைத் தெரிவுசெய்து சிறுகுறிப்பு எழுதுக.

1. வாழ்வியற்சடங்குகள்
2. பண்டிகைகள்
3. ஞானப்பிரகாசமுனிவர்
4. திருக்கோணேச்சரம்
5. பஞ்சபுராணம்.

(6×2 =12 புள்ளிகள்)

www.lkedu.lk

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
Provincial Department of Education, Northern Province

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

தரம் - 06	கத்தோலிக்கத் திருமறை	நேரம்: 2.00 மணித்தியாலங்கள்

பெயர் / சுட்டெண் .....

பகுதி– I

❖ **பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. கிறிஸ்தவர்களின் பரிசுத்தமான நூல் எது?
1) பரிசுத்த ஏடு 2) திருவிவிலியம் 3) குர்ஆன் 4) பகவத்கீதை

02. படைப்பின் ஒழுங்குமுறையில் நான்காம் நாளில் படைக்கப்பட்டது.
1) வானமும் நீரும் 2) நிலமும் மரம் செடிகளும்
3) சூரியன் சந்திரன் விண்மீன் 4) மனிதன்

03. இஸ்ரேயல் மக்களைத் துன்புறுத்திய அரசன்,
1) ஏரோது 2) பிலாத்து 3) பார்வோன் 4) சவுல்

04. இடைவிடாமல் செபிக்கவேண்டும் என்பதற்கு இயேசு கூறிய உவமை,
2) பரிசேயனும் வரிதண்டுபவனும் 2) நள்ளிரவில் அப்பம் கேட்ட நண்பன்
3) ஊதாரிமைந்தன் 4) விதைப்பவன் உவமை

05. புகுமுக அருளடையாளம் அல்லாதது எது?
1) திருமுழுக்கு 2) நற்கருணை 3) உறுதிப்பூசுதல் 4) ஒப்புரவு

06. டொமினிக் குஸ்மான் எந்த நாட்டைச் சேர்ந்தவர்,
1) ஸ்பானியா 2) கார்மேல் மலை 3) சீனாய் மலை 4) ஒலிவமலை

07. இயேசுவுக்கு விருத்தசேதனம் செய்யப்பட்டது?
1) மூன்றாம் நாள் 2) எட்டாம் நாள் 3) நாற்பதாம் நாள் 4) ஐம்பதாம் நாள்

08. நற்கருணை புதுமை நடைபெற்ற காலம்,
1) கி.பி.900 2) கி.பி.800 3) கி.பி.600 4) கி.பி.700

09. புனித ஸ்தேவான் கொல்லப்பட்ட விதம்,
1) சிலுவையில் அறைந்து 2) சிரச்சேதம் செய்து
3) தலைகீழாக தொங்கவிட்டு 4) கல்லால் எறிந்து

10. ஆவணி 15ம் திகதி மரியன்னைக்குக் கொண்டாடப்படும் விழா,
1) மரியன்னையின் விண்ணேற்பு விழா 2) மரியன்னையின் பிறப்பு விழா
3) அமல உற்பவ விழா 4) காணிக்கை மாதா விழா

(2X10=20 புள்ளிகள்)

www.ikedu.lk

02. சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் எழுதுக.

1. நோவாவும் வெள்ளப்பெருக்கும் தொடக்கநூலில் கூறப்பட்டது. ( )
2. புனித லூக்கா இயேசுவின் திருத்தூதர். ( )
3. ஞாயிறு தினத்தில் இயேசுவின் உயிர்ப்பை நினைவு கூருகின்றோம். ( )
4. இயேசுவின் பிறப்பு முதல் முதல் ஞானிகளுக்கு அறிவிக்கப்பட்டது. ( )
5. திருவிவிலியம் இறைஏவுதலால் எழுதப்பட்ட நூலாகும். ( )
6. யோவான் நற்செய்தியின் அடையாளம் கழுகு ஆகும். ( )
7. இயேசு குருத்துவத்தை ஏற்படுத்தியது பெரிய வியாழன். ( )
8. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு குலமுதுவர்கள் ஆவர். ( )
9. சிலை வழிபாடு இரண்டாம் கட்டளைக்கு எதிரான பாவம். ( )
10. அருளடையாளங்கள் எமக்கு அவசியமில்லை. ( )

(2X10=20 புள்ளிகள்)

03. பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளி நிரப்புக.

(இஸ்ராயேல் / உயிர்மூச்சை / கதிரவனை / உயிர்ப்பை / பகைவரையும்)

1. கடவுள் நல்லோர் மேலும் தீயோர் மேலும் தம் ..... உதித்தெழச் செய்கிறார்.
2. பாவத்தில் விழுந்த மனிதனை மீட்க இறைவன் ..... இனத்தைத் தெரிந்தெடுத்தார்.
3. நாம் எம்மைப்போல் ..... அன்பு செய்ய வேண்டும்.
4. கடவுள் மனிதனை உருவாக்கி அவன் நாசிகளில் ..... ஊதினார்.
5. பாஸ்கா கால மூவேளைச் செபத்தில் இயேசுவின் ..... நினைவு கூருகின்றோம்.

(5X2=10 புள்ளிகள்)

www.lkedu.lk

பகுதி-II

➢ **விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

1. அ. ஐந்நூலில் அடங்கும் நூல்கள் இரண்டு தருக.
   ஆ. புதிய ஏற்பாட்டு நூல்கள் மூன்று தருக.
   இ. திருவிவிலியத்தை புனிதமாகப்பேண நீர் மேற்கொள்ளும் செயல்முறைகள் ஐந்து தருக
   (2+3+5 =10 புள்ளிகள்)

2. அ. பணிவாழ்வின் அருளடையாளங்கள் இரண்டு தருக.
   ஆ. குருத்துவத்தின் நிலைகள் மூன்றையும் தருக?
   இ. குருக்களின் பணிகள் ஐந்து தருக? (2+3+5 =10 புள்ளிகள்)

3. அ. திருமுழுக்கின்போது பயன்படுத்தும் பொருட்கள் இரண்டு தருக.
   ஆ. திருமுழுக்கினால் பெறும் அருள்கள் மூன்று தருக.
   இ. நோயிற்பூசுதல் அருளடையாளத்தைப் பெற்றுக்கொடுக்கும் இடத்தை நீர் எவ்வாறு ஆயத்தம் செய்வீர். (2+3+5 =10 புள்ளிகள்)

4. அ. மரியன்னையை அழைக்கும் வேறு பெயர்கள் இரண்டு தருக.
   ஆ. இலங்கையில் கத்தோலிக்கருக்குரிய கடன்திருநாட்கள் மூன்று தருக.
   இ. ஓய்வு நாளில் நீர் செய்யக்கூடிய செயல்கள் ஐந்து தருக. (2+3+5 =10 புள்ளிகள்)

5. அ. செபத்தின் பண்புகள் இரண்டு தருக.
   ஆ. பொதுச் செபங்கள் மூன்று தருக.
   இ. நீங்கள் செபிக்கும் சந்தர்ப்பங்கள் ஐந்து தருக. (2+3+5 =10 புள்ளிகள்)

6. பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
   அ. புனித 2ம் அருளப்பர் சின்னப்பர்
   ஆ. படைப்பு
   இ. திருவிவிலியம்
   ஈ. அருளடையாளம்
   (5+5=10 புள்ளிகள்)

www.lkedu.lk

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
Provincial Department of Education, Northern Province

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

தரம் - 06	கிறிஸ்தவம்	நேரம்: 2.00 மணித்தியாலங்கள்

பெயர் / சுட்டெண் .....

பகுதி -I

01) பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

01. உலகப் படைப்பின் வரலாற்றில் கடவுள் உயிருள்ளவற்றைப் படைத்தது,
1) முதலாம் நாளில் 2) மூன்றாம் நாளில் 3) ஐந்தாம் நாளில் 4) ஏழாம் நாளில்

02. கடவுள் எத்தனையாம் நாளினை ஆசீர்வதித்துப் புனிதப்படுத்தினார்?
1) முதலாம் நாளினை 2) ஏழாம் நாளினை 3) நான்காம் நாளினை 4) ஐந்தாம் நாளினை

03. இயேசுவின் பிறப்பின் செய்தியை முதலில் மரியாவுக்கு அறிவித்தவர்,
1) மிக்கேல் தூதர் 2) கபிரியேல் தூதர் 3) பிலாத்து 4) ஏரோது மன்னன்

04. இயேசு 12 வயதில் தாய் மரியாவுடனும் தந்தை யோசேப்புடனும் சென்று காணாமல் போன இடத்தின் பெயர்,
1) யூதேயா 2) சமாரியா 3) எகிப்து 4) எருசலேம்

05. இயேசுவின் சிலுவையைச் சுமப்பதற்கு உதவியவர்,
1) சீரேன் ஊர் சீமொன் 2) பிலிப்பு 3) யூதா 4) சின்னப்பர்

06. எமக்கு நிலை வாழ்வு கிடைத்தது,
1) இயேசுவின் பாடுகளால் 2) இயேசுவின் மரணத்தினால்
3) இயேசுவின் உயிர்ப்பால் 4) இயேசுவின் விண்ணேற்பால்

07. இயேசு எத்தனை வயதில் திருமுழுக்குப் பெற்று பணியை ஆரம்பித்தார்?
1) ஏழு வயதில் 2) 18 வயதில் 3) இருபது வயதில் 4) முப்பது வயதில்

08. இயேசுவின் பணிக்கு வழியை ஆயத்தம் செய்தவர்
1) திருமுழுக்கு யோவான் 2) பிலிப்பு
3) யோசேப்பு 4) இராயப்பர்

09. இயேசு உயிர்த்தெழுந்து எத்தனை நாட்களுக்குப் பின் விண்ணேற்றம் அடைந்தார்?
1) முப்பது 2) நாற்பது 3) ஐம்பது 4) அறுபது

10. எத்தியோப்பிய அரச அலுவலருக்குத் திருமுழுக்குக் கொடுத்தவர்,
1) பிலிப்பு 2) யூதா 3) சின்னப்பர் 4) பர்ணபா

11. கிறிஸ்தவனில் இருக்க வேண்டிய பண்புகளில் ஒன்று,
1) கோபம் 2) சண்டை 3) கீழ்ப்படிவு 4) பொறாமை

12. நல்ல மேய்ப்பனில் காணப்படவேண்டிய குணாதிசயம்,
1) பொறாமை 2) இரக்கம் 3) சுயநலம் 4) பெருமை

www.lkedu.lk

13. கர்த்தர் என் ..... இருக்கிறார்.
1) துணையாக 2) தலைவராக 3) நண்பராக 4) மேய்ப்பராக

14. நாம் காலையும் மாலையும் ..... வேண்டும்.
1) ஜெபிக்க 2) விளையாட 3) படம் பார்க்க 4) நித்திரை செய்ய

15. யேசு வளர்ந்த ஊர் எது?
1) பெத்லகேம் 2) நசரேத்து 3) கானான் 4) எகிப்து

16. கிறிஸ்துவின் நற்செய்திப் பணிக்காக கல்லால் எறியப்பட்டு கொலை செய்யப்பட்டவர்
1) இராயப்பர் 2) சின்னப்பர் 3) ஸ்தேவான் 4) பிலிப்பு

17. இயேசுவுக்கு ஏற்பட்ட சோதனைகளின் எண்ணிக்கை,
1) நான்கு 2) மூன்று 3) இரண்டு 4) ஐந்து

18. யூதர்களின் விழா எனப்படுவது,
1) பாஸ்கா 2) கிறிஸ்துவின் பிறப்பு 3) திருவிழிப்பு 4) விருந்துண்ணல்

19. தந்தை, மகன், தூய ஆவி மூவரும் ஒன்றாக வெளிப்பட்ட சந்தர்ப்பம்,
1) கிறிஸ்துவின் புதுமையில் 2) எருசலேமில்
3) கிறிஸ்துவின் திருமுழுக்கில் 4) கடல் மீது நடந்த பொழுது

20. படைப்பின் சிகரமாக விளங்குவது,
1) சூரியன் 2) இயற்கை 3) நீர் நிலைகள் 4) மனிதன்

(20x2 = 40 புள்ளிகள்)

பகுதி - II

02) பின்வருவனவற்றிற்கு சரி (✓) பிழை (×) அடையாளமிடுக.

1. இயேசுவின் பிறப்பு முதலில் இடையர்களுக்கு அறிவிக்கப்பட்டது. ( )
2. யூதர்களின் முக்கிய விழா பாஸ்கா விழாவாகும். ( )
3. ஈசாக் மந்தை மேய்ப்புத் தொழில் செய்தார். ( )
4. கடவுளுக்கு ஏற்புடையவராக பரிசேயன் வீடு திரும்பினார். ( )
5. திருவிவிலியத்தில் முதல் 7 புத்தகமும் பஞ்சாகமம் ஆகும். ( )
6. கிறிஸ்தவ வாழ்விற்கு செபம் அவசியமாகும். ( )
7. லேவியன் யூதனுக்கு உதவி செய்தான். ( )
8. பார்த்திமேயு நம்பிக்கையினால் பார்வை பெற்றான். ( )
9. இயேசு சிலுவையுடன் மூன்று முறை விழுந்தார். ( )
10. கிறிஸ்தவ பிள்ளையாக வாழ தாழ்மையைக் கடைப்பிடிக்க வேண்டும். ( )

(10x1 10 புள்ளிகள்)

www.lkedu.lk

03) பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளியை நிரப்புக.

1. கடவுள் தன் உருவில் மனிதரைப் படைத்தார் ..... அவர்களைப் படைத்தார்.
2. "ஆலயத்தை இடித்து ..... கட்டுகிறவனே உன்னை நீயே காப்பாற்று"
3. "எதிர்நோக்கைத் தரும் கடவுள், நம்பிக்கையால் உண்டாகும் ..... உங்களை நிரப்புவாராக"
4. "ஆண்டவரே என்றென்றைக்கும் உள்ளது உமது ..... அது நிலைத்துள்ளது"
5. உன் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு ..... உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூர்வாயாக"

(5x2 = 10 புள்ளிகள்)

❖ **அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

1) இயேசுவின் பிறப்புடன் தொடர்புபட்ட சந்தர்ப்பங்கள் யாவை?
2) யூத சட்டத்தின்படி பன்னிரண்டு வயதை அடைந்த ஆண்களுக்கு கிடைக்கும் பொறுப்புக்கள் எவை?
3) " ஏலி ஏலி லாமா சபத்தானி" என்பதன் பொருள் என்ன?
4) இயேசுவின் திருமுழுக்கு நிகழ்விலிருந்து வெளிப்படும் செய்தி யாது?
5) சமாரியன் யூதனுக்குச் செய்த சேவைகள் யாவை?
6) பார்த்திமேயுவின் நம்பிக்கையிலிருந்து கிறிஸ்தவர்களாகிய எமது வாழ்விற்கு கிடைக்கும் செய்திகள் நான்கு தருக.
7) யூத சமய சட்டப்படி தொழுநோயாளியை எவ்வாறு நோக்கினார்கள்?
8) இறைவனுக்கு முன்பாக வரி தண்டுபவன் எவ்விதம் வேண்டினான்?
9) புதிய ஏற்பாட்டில் காணப்படும் நற்செய்தி நூல்கள் எவை?
10) பத்துக் கட்டளைகளில் கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையிலான தொடர்பு பற்றி கூறப்படும் கட்டளைகள் எவை?

(10x4 = 40 புள்ளிகள்)

www.lkedu.lk

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
Provincial Department of Education, Northern Province

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

தரம் - 06	இஸ்லாம் – I, II	நேரம்: 2.00 மணித்தியாலங்கள்

பெயர் / சுட்டெண் .....

பகுதி-I

01. மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

01. தவ்ஹீதின் எதிர்ப்பதம் யாது?
1.ஈமான் 2.இஸ்லாம் 3.ஷிர்க் 4. குப்ர்

02. அபுல் பசர் என அழைக்கப்படும் நபி,
1. மூஸா(அலை) 2. ஈஸா(அலை) 3.நூஹ்(அலை) 4. ஆதம்(அலை)

03. மனிதன் சுவாசிக்கும் வாயு,
1. காபனீரொட்சைட் 2.ஒட்சிசன் 3.நைதரசன் 4. ஐதரசன்

04. இஹ்லாஸ் என்பதன் கருத்து,
1. உளத்தூய்மை 2.மனிதர்கள் 3.விடியற்காலை 4. வெற்றி

05. வஹி கொண்டுவரும் மலக்கு யார்?
1. மாலிக(அலை) 2. றகீப் (அலை) 3.ஜிப்ரீல் (அலை) 4. நகீர் (அலை)

06. ஜின்கள் எதனால் படைக்கப்பட்டுள்ளனர்?
1. நெருப்பு 2. ஒளி 3. ஒலி 4. களிமண்

07. முஸ்லீம்களின் இரண்டாவது கடமை எது?
1. கலிமா 2. ஹஜ் 3. ஸக்காத் 4. தொழுகை

08. நாவினால் செய்யும் பாவம் அல்லாதது எது?
1.கோள் 2. புறம் 3. அடித்தல் 4. திட்டுதல்

09. நபி(ஸல்) அவர்களுக்கு முதன் முதலாக இறக்கப்பட்ட சூரா எது?
1. சூரா அலக் 2. சூரா பலக் 3. சூரா நாஸ் 4. சூரா கவ்ப்

10. அல் அமீன் என்பதன் பொருள் யாது?
1. உண்மையாளர் 2. நேர்மையாளர் 3. நம்பிக்கையாளர் 4. நட்புக்குரியவர்

11. நுபுவத் என்பதன் பொருள்,
1. ஏகத்துவம் 2. நபித்துவம் 3. வேதம் 4. இறைகட்டளை

12. முதன் முதலில் இஸ்லாத்தை ஏற்ற பெண்மணி யார்?
1. கதீஜா(ரழி) 2. ஆயிஸா (ரழி) 3. ஹப்ஸா(ரழி) 4. சவ்தா(ரழி)

www.lkedu.lk

13. அல்குர்ஆன் எம்மொழியில் அருளப்பட்டது?
1. அரபு 2. சுர்யானி 3. அபரானி 4. யூனானி

14. உழுவின் பர்ளுகள்
1. 4 2. 5 3. 6 4. 7

15. பாத்திமா நாயகி யாரைத் திருமணம் செய்தார்கள்?
1. உமர் (ரழி) 2. உஸ்மான் (ரழி) 3. அம்மார் (ரழி) 4. அலி(ரழி)

16. சல்மான் பாரிஸி(ரலி)எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
1. மக்கா 2. மதீனா 3. பாரசீகம் 4. சிரியா

17. ஆயிஷா (ரழி)யின் தந்தையின் பெயர் யாது?
1. அபூபக்கர் (ரழி) 2. உமர் (ரழி) 3. அலி(ரழி) 4. உஸ்மான்(ரழி)

18. ஹதீஸ் என்பது,
1. இறைவழி 2. நபிவழி 3. கலீபாக்கள்வழி 4. சஹாபாக்கள் வழி

19. ஆப்றஹா மன்னன் எந்த நாட்டைச் சேர்ந்தவன்?
1. எகிப்து 2. யமன் 3. சிரியா 4. மதீனா

20. பீல் என்பதன் கருத்து
1. குருவி 2. குதிரை 3. யானை 4. பருந்து

(20 புள்ளிகள்)

பகுதி-II

02. சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் அடையாளமிடுக.

1. சுவனத்தின் திறவுகோள் தொழுகையாகும். ( )
2. ஜின்கள் நெருப்பினால் படைக்கப்பட்டுள்ளனர். ( )
3. அல்குர்ஆன் 33 வருட காலமாக இறங்கியது. ( )
4. நபியவர்கள் தியானித்த குகை தவ்ர் குகையாகும். ( )
5. யத்ரிப் என்பது மக்காவைக் குறிக்கும். ( )
6. இஸ்லாத்தின் சட்ட மூலாதாரங்கள் 2 ஆகும். ( )
7. பிறர் வீட்டினுள் ஜன்னல் வழியாக எட்டிப் பார்க்கலாம். ( )
8. உலகின் முதல் மனிதன் மூஸா (அலை) ஆவார்கள். ( )
9. அபாபீல் என்பது சிறிய பறவைக் கூட்டத்தைக் குறிக்கும். ( )
10. அஸ்ஸீத்தீக்கா என்பது ஆயிஷா நாயகியைக் குறிக்கும். ( )

(10 புள்ளிகள்)

03. சரியான விடையினைத் தெரிவு செய்து இடைவெளி நிரப்புக.

(சுற்றாடல், இப்லீஸ், ஹவ்வா (அலை), முஹம்மது நபி, நோன்பு , யானை, துக்க ஆண்டு, சூரா பாத்திஹா, அலி(ரழி), களிமண்)

1. ஷவ்வம் என்பது ..... குறிக்கும்.

2. தொழுகையின் பர்ளுகளில் ஒன்று ..... ஆகும்.

3. ஆதம் நபியின் மனைவி.....ஆவார்.

www.lkedu.lk

4. மனிதன் ..... னால் படைக்கப்பட்டுள்ளான்.

5. எம்மைச் சூழவுள்ள அனைத்தும் .....எனப்படும்.

6. ஷைத்தான்களின் தலைவன் ..... எனப்படும்.

7. இறைவனால் அனுப்பப்பட்ட இறுதித் தூதர் ..... .ஆவார்.

8. முதன் முதலில் இஸ்லாத்தை ஏற்ற சிறுவன் .....

9. ஆமுல் ஹுஸ்ன் என்பது..... டைக் குறிக்கும்.

10. பீல் என்ற சொல்லின் கருத்து ..... என்பதாகும்.

(20 புள்ளிகள்)

பகுதி -II

பின்வரும் வினாக்களில் ஐந்து வினாக்களைத் தெரிவு செய்து விடை எழுதுக

01. 1. நீரின் வகைகளைத் தருக.
2. நஜீஸின் பிரிவுகளை எழுதுக.
3. சாதாரண நஜீஸிற்கு 5 உதாரணம் எழுதுக. (2+ 3+ 5 =10 புள்ளிகள்)

02. 1. நுபுவத் என்பதன் பொருள் யாது?
2. நபியவர்களுக்கு எங்கு வைத்து நுபுவத் கிடைத்தது?
3. அல்குர் ஆனின் வேறு பெயர்கள் 5 தருக? (2+ 3+ 5 =10 புள்ளிகள்)

03. 1. இஸ்லாமிய வருடங்களின் ஒன்பதாவது மாதம் எது?
2. நோன்பு மாதத்தின் சிறப்பான இரவு எது?
3. நோன்பு மாதம் செய்ய வேண்டிய நல்லமல்கள் 5 தருக. (2+ 3+ 5 =10 புள்ளிகள்)

04. 1. ஹதீஸ் என்றால் என்ன?
2. ஹதீஸ் துறையில் சிறப்புற்று விளங்கிய 3 இமாம்களைக் குறிப்பிடுக.
3. நாம் பெற்றோருக்கு செய்ய வேண்டிய கடமைகள் 5 தருக? (2+ 3+ 5 =10 புள்ளிகள்)

05. 1. நபியவர்களின் பெற்றோரின் பெயர்களைத் தருக.
2. பாத்திமா(ரழி)ன் பண்புகள் 3 இனை தருக.
3. நபியவர்களின் மனைவிமார் 5 பேரின் பெயர்களைத் தருக. (2+ 3+ 5 =10 புள்ளிகள்)

06. 1. நாஸ் என்பதன் பொருள் யாது?
2. சூரா இஹ்லாஸின் வேறு பெயர்களைத் தருக?
3. ஆப்றஹா மன்னனின் படைகள் எவை? (2+ 3+ 5 =10 புள்ளிகள்)

07 1. சஹாபா தோழர்கள் இருவரின் பெயர்களைத் தருக.
2. நாம் அயலவருக்கு செய்யும் உதவிகள் 3 தருக.
3. பிராணிகள் மூலம் கிடைக்கும் பயன்கள் 5 தருக. (2+ 3+ 5 =10 புள்ளிகள்)

www.ikedu.lk

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
Provincial Department of Education, Northern Province


மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

தரம் - 06	சித்திரக்கலை– I,II	நேரம்: 2.00 மணித்தியாலங்கள்

பெயர் / சுட்டெண் .....

கவனிக்க: பகுதி I எல்லா வினாக்களுக்கும் இத்தாளில் விடை எழுதுக.

➢ ***01 - 05 வரையான வினாக்களுக்கு கீழே காட்டப்பட்டுள்ள படங்களினை இனங்கண்டு அவற்றைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.***



A B C D E

1. A - ..... 2. B - .....
3. C - ..... 4. D - .....
5. E -..... *(10 புள்ளிகள்)*

➢ ***6 - 10 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.***

6. மூல வர்ணங்களில் ஒன்றாக அமையும் வர்ணம் எது?
   1. சிவப்பு 2. கறுப்பு 3. பச்சை 4. ஊதா
7. வர்ணத்தின் இருண்ட, இளநிலைச்சாயல் எவ்வாறு அழைக்கப்படும்?
   1. தூரநோக்கு 2. ஒளிநிழல் 3. வர்ணபலம் 4. தூரதரிசனம்
8. கிறிஸ்தவ தேவாலயத்தின் உள்ளே நிறக்கண்ணாடித் துண்டுகளாலான ஆக்கம் எப்பெயரால் அழைக்கப்படும்?
   1. கலிக்கிறபிக் அலங்காரம் 2. மொசைக்சித்திரம்
   3. கொலாஜ் 4. கோலம்
9. இந்து ஆலயங்களில் மரச்சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த அசையும் பகுதியாக அமைவது எது?
   1. கோபுரம் 2. வசந்தமண்டபம் 3. கர்ப்பக்கிரகம் 4. தேர்
10. துணை வர்ணங்களில் ஒன்றாகக் காணப்படும் வர்ணம் எது?
    1. ஊதா 2. சிவப்பு 3. மஞ்சள் 4. நீலம்

(05 புள்ளிகள்)

www.ikeet.lk

➢ ***11 - 15 வரையான வினாக்களுக்குச் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளம் இடுக.***

11. புகையிரதத் தண்டவாளத்தைக் காட்டப் பயன்படுவது சமாந்தர இரேகையாகும். ( )

12. நீலம், சிவப்பு வர்ணங்களைக் கலக்கும்போது பெறப்படுவது கபிலம் ஆகும். ( )

13. இலங்கையின் முதலாவது தாதுகோபம் தூபராம ஆகும். ( )

14. குளிர்வர்ணங்கள் முன்செல்லும் தன்மையுடையன. ( )

15. இந்து ஆலயங்களில் மூலமூர்த்தி அமைந்துள்ள பகுதி கருவறை ஆகும். ( )

(05 புள்ளிகள்)

➢ ***16 - 20 வினாக்களிற்குப் பொருத்தமான விடையினை இடைவெளிகளில் எழுதுக.***

16. கிறிஸ்தவ தேவாலய அடித்தளமானது ..... வடிவத்தில் அமைக்கப்படும்.

17. தூபிகளின் உட்பகுதியில் புத்தரின் ..... வைத்துக் கட்டப்படும்.

18. றம்ழான் தினத்தன்று தானம் வழங்குதல் ..... எனப்படும்.

19. இந்து ஆலயங்களில் சிவனின் வாகனமான ..... சிலை காணப்படும்.

20. நத்தார் பண்டிகையினைக் கொண்டாடுபவர்கள் ..... இனத்தவராவார்.

(10 புள்ளிகள்)

➢ ***21 - 25 வரையான வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.***

21. தூபியானது அண்டத்தின் தன்மைக்கேற்ப எத்தனை வகைப்படும்?

.....

22. "மஸ்ஜித்" ஒன்றின் முக்கியமான பகுதியான கும்மட்ட வடிவத்தை எவ்வாறு அழைப்பர்?

.....

23. இலங்கையில் ஆரம்பத்தில் கிறிஸ்தவ தேவாலயங்கள் யாரால் அமைக்கப்பட்டன?

.....

24. நத்தார் பண்டிகை கொண்டாடப்படுவதன் நோக்கம் யாது?

.....

25. இந்து ஆலய கர்ப்பக்கிரகம் அமைக்கப் பயன்படும் இரண்டு ஊடகங்கள் தருக.


.....

(10 புள்ளிகள்)


www.lkedu.lk

பகுதி - II

கீழே தரப்பட்ட பொருட்களை இரேகை மூலம் வரைந்து ஒளிநிழல் காட்டுக.



பூ ஒன்று



பந்து

(10 புள்ளிகள்)

பகுதி – III

பின்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து வரைந்து வர்ணம் தீட்டுக.

01. எமது பாடசாலையின் விளையாட்டுப் பூங்கா

02. தைப்பொங்கல் விழா

03. வாசனை மலர்களும் வண்ணத்துப் பூச்சியும்

04. நீலம், மஞ்சள், சிவப்பு நிறங்களைக் கலந்து புதிய கோலங்களை உருவாக்குவோம்.

05. பூக்களைப் பயன்படுத்தி சீத்தைத் துணிக்கான பரவுரூப சித்திரம் வரைக.

06. விளையாட்டு விழாவுக்கான அழைப்பிதழ் ஒன்றினை வரைக.

(50 புள்ளிகள்)

www.lkedu.lk

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
Provincial Department of Education, Northern Province

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

தரம் - 06	கர்நாடக சங்கீதம் – I,II	நேரம்: 2.00 மணித்தியாலங்கள்

பெயர் / சுட்டெண் .....

பகுதி-I

01. எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

➢ **சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. சங்கீதத்திற்கு ஆதாரமாக உள்ள ஸ்வரங்கள்,
1) 5 2) 7 3) 2 4) 12

02. "அன்பு நிறைந்த பாட்டி" என்ற சிறுவர் பாடலின் இராகம்,
1) காபி 2) சங்கராபரணம் 3) பிலஹரி 4) தேஷ்

03. திஸ்ர நடைக்குரிய சொற்கட்டு,
1) தகதிமி 2) தகதகிட 3) தகிட 4) தகதிமி தகதகிட

04. அனுத்ருதத்தின் குறியீடு
1) ∪ 2) / 3) o 4) +

05. "இசை பயில்வோம்" என்ற சிறுவர் பாடலை இயற்றியவர்,
1) வீரமணி ஐயர் 2) பொன் ஸ்ரீ வாமதேவன்
3) பாரதியார் 4) புரந்தரதாஸர்

(5 X 2 = 10 புள்ளிகள்)

02. சரியான விடையைத் தெரிவு செய்து இடைவெளி நிரப்புக.

(மாயாமாளவ கௌளை, தம்புரா, நட்டபாடை, ஸப்த, அமரோசை)

01. சுருதிக்காகப் பயன்படுத்தப்படும் வாத்தியம் ..... ஆகும்.

02. ஏழு ஸ்வரங்களை ..... ஸ்வரங்கள் என்று அழைப்பர்.

03. அவரோகணத்தை ..... எனவும் அழைப்பர்.

04. "தோடுடைய செவியன்" எனும் தேவாரத்தின் பண் ..... ஆகும்.

05. அப்பியாச வரிசைகள் பாடப்படும் இராகம் .....ஆகும்.

(5 X 2 = 10 புள்ளிகள்)

www.lkedu.lk

03. தொடர்புபடுத்துக.

அ	ஆ
1. நாதம்	மூன்று
2. தமிழ்மொழி வாழ்த்து	பிறப்பு
3. மருத்துவிச்சி பாடல்	வைகாசி மாதம்
4. வெசாக்	சுப்பிரமணிய பாரதியார்
5. திரியாங்கம்	இரண்டு வகை

(5 X 2 = 10 புள்ளிகள்)

04. பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் பிழை (×) எனவும் அடையாளமிடுக.

01. சூழலில் கேட்கப்படும் இனிமையான ஒலி இசை எனப்படும். ( )

02. சங்கீதத்திற்கு சுருதி தந்தை போன்றது. ( )

03. மாயாமாளவ கௌளை இராகத்தின் மேள எண் 15. ( )

04. ஆவர்த்தன முடிவைக் காட்டும் குறியீடு // ( )

05. திருமணச் சடங்குகளில் பாடப்படும் பாடல் நலங்குப் பாடலாகும். ( )

(5 X 2 = 10 புள்ளிகள்)

பகுதி-II

➢ **பின்வருவனவற்றுள் எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

01. சங்கீதம் பற்றி 5 வசனங்கள் எழுதுக. (15 புள்ளிகள்)

02. மூன்றாவது ஸ்வர வரிசையை இராகம், தாளம், அங்க அடையாளங்களுடன் எழுதுக.
(15 புள்ளிகள்)

03. 1. நாதம் என்றால் என்ன?
2. நாதம் எத்தனை வகைப்படும்? அவை எவை?
3. ஆகத நாதம் என்றால் என்ன?
4. அநாகத நாதம் என்றால் என்ன? (3+3+4+5 = 15 புள்ளிகள்)

04. 1. ஸ்வரம் என்றால் என்ன?
2. ஸப்த ஸ்வரங்களையும் வடமொழிப் பெயர்களையும் தமிழ்ப் பெயர்களையும் எழுதுக.
(5+10 = 15 புள்ளிகள்)

05. நத்தார் பண்டிகை பற்றி 5 வசனங்கள் எழுதுக. (15 புள்ளிகள்)

06. 1. ஆரோகணம் என்றால் என்ன? மறுபெயர்கள் 2 தருக.
2. அவரோகணம் என்றால் என்ன? மறுபெயர்கள் 2 தருக.
(7 + 8 = 15 புள்ளிகள்)

www.lkedu.lk

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
Provincial Department of Education, Northern Province

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

தரம் - 06	பரதநாட்டியம்– I,II	நேரம்: 2.00 மணித்தியாலங்கள்

பெயர் / சுட்டெண் .....

பகுதி-I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.**

01. முருகனை வேண்டி ஆடப்படும் கிராமிய நடனம்,
1) கும்மி 2) கோலாட்டம்
3) கரகம் 4) காவடி

02. ஸம்யுத ஹஸ்தங்களின் எண்ணிக்கை?
1) 22 2) 24
3) 26 4) 28

03. நாட்டடவு அமைந்துள்ள தாளம்,
1) ஆதி 2) ரூபகம்
3) ஜம்பை 4) மட்டியம்

04. நால்வேதங்களின் தொகுப்பு,
1) கண்டிய நடனம் 2) மணிப்புரி
3) பரதம் 4) கதகளி

05. "முளைப்பாரியின்" போது பயன்படுத்தப்படும் வாத்தியம்?
1) நாதஸ்வரம் 2) உறுமி மேளம்
3) மிருதங்கம் 4) தபேலா

60. மகிழ்ச்சியின்பொருட்டு ஆடப்படும் கிராமிய நடனங்களில் ஒன்று?
1) கரகம் 2) காவடி
3) கும்மி 4) கொழுந்து நடனம்

07. தியானஸ்லோகத்தில் தாராதி குறிப்பது,
1) உலகம் 2) உடம்பு
3) சந்திரன் 4) நட்சத்திரம்

08. நவராத்திரிவிழா கொண்டாடப்படும் மாதம்
1) புரட்டாதி 2) தை
3) பங்குனி 4) மார்கழி

09. கோயில் நடனமாதர் எனப்படுவோர்,
1) அறிஞர் 2) தேவதாசிகள்
3) தோழிகள் 4) கலைஞர்

10. உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை முகத்தினால் வெளிப்படுத்துவது
1) பாவம் 2) இராகம்
3) தாளம் 4) அபிநயம் (10x 1 = 10 புள்ளிகள்)

www.lkedu.lk

02. **சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் அடையாளமிடுக.**

1. பரதத்தின் முழுமுதற்கடவுள் நடராஜப்பெருமான் ஆவார். ( )
2. எசலபெரகரா மார்கழி மாதத்தில் கொண்டாடப்படும் ( )
3. நால்வகை வேதங்களுள் அதர்வணமும் ஒன்றாகும். ( )
4. கால்களை நாட்டிச் செய்வது தட்டடவு எனப்படும். ( )
5. சூரியப்பிறை வலது பக்கமும் சந்திரப்பிறை இடது பக்கமும் அணிதல் வேண்டும். ( )

(5x2= 10 புள்ளிகள்)

03. **தொடர்புபடுத்துக.**

1)	நாட்டடவு	கற்கடகம்
2)	நேர்த்திக்கடன்	அபூர்வகஸ்தம்
3)	பிரலம்பம்	திரிபதாகம்
4)	தண்டியம்	காவடி
5)	நண்டு	கோல்

(5x 2 = 10 புள்ளிகள்)

04. **கீறிட்ட இடங்களில் மிகப்பொருத்தமான சொல்லை வைத்து இடைவெளியை நிரப்புக.**

(எசலபெரகரா, சிலம்பக்கூடம், தகிட , பஞ்சகச்சம் , குருஸ்லோகம்)

1) குருர் ப்ரம்மா குருவிஷ்ணு'' என்று ஆரம்பிக்கப்படுவது ..... ஆகும்.
2) நாட்டியம் கற்றுக்கொடுக்கும் அறை ..... எனப்படும்.
3) பரதநாட்டியத்திற்குப் பயன்படுத்தப்படும் ஆடை ..... எனப்படும்.
4) சிங்கள மக்களின் பாரம்பரிய விழாக்களில் ..... ஒன்றாகும்.
5) திஸ்ர நடையின் சொற்கட்டு ..... ஆகும். (5x 2 = 10 புள்ளிகள்)

www.lkedu.lk

பகுதி-II

➢ **எல்லா வினாக்களிற்கும் விடை எழுதுக.**

01. 1. இரட்டைக்கை முத்திரை என்பதன் மறுபெயர் யாது?

2. இரட்டைக்கை முத்திரைகள் எத்தனை?

3. அர்த்தச்சந்திரன் முத்திரை பிடித்துச் செய்யப்படும் இரட்டைக்கை முத்திரை யாது?

4. இரட்டைக்கை முத்திரைகளில் முதல் பத்தினை வரிக்கிரமாகக் கருத்துடன் எழுதுக.

(2+1+2+10 = 15 புள்ளிகள்)

02. 1) பின்வரும் மாதங்களிற்குரிய நிகழ்வுகளை எழுதுக.

1. தை
2. பங்குனி
3 ஆவணி
4. வைகாசி
5. மார்கழி (05 புள்ளிகள்)

2) பரதம் பற்றி 05 வாக்கியங்களை எழுதுக. (10 புள்ளிகள்)

03. 1. பரத இலட்சணங்கள் எத்தனை?

2. பரத இலட்சணங்களை எழுதுக.

3. அவை ஒவ்வொன்றைப் பற்றியும் எழுதுக. (2+3+10 = 15 புள்ளிகள்)

04. 1. கிராமிய நடனம் என்றால் என்ன?

2. கிராமிய நடனங்கள் எவை?

3. சந்தோசத்தின் நிமித்தம் ஆடப்படும் கிராமிய நடனங்கள் 02 தருக.

4. மேற்கூறிய நடனங்களில் ஒன்றினைப்பற்றி 05 வாக்கியங்கள் எழுதுக. (1+2+2+10 = 15 புள்ளிகள்)

www.lkedu.lk

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
Provincial Department of Education, Northern Province

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

தரம் - 06	நாடகமும் அரங்கியலும்– I,II	நேரம்: 2.00 மணித்தியாலங்கள்

பெயர் / சுட்டெண் .....

பகுதி-I

➢ **சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. போலச்செய்தலின் அடியாகத் தோற்றம் பெற்றது,
1. நாடகம் 2. சிற்பம்
3. ஓவியம் 4. பரதம்

02. முன்னாயத்தம் இன்றி உடனடியாகச் சித்திரிப்பது,
1. ஊமம் 2. புதிதளித்தல்
3.கரகாட்டம் 4. கூத்து

03. நாட்டார் அரங்க விளையாட்டாக அமைவது,
1. உதைபந்தாட்டம் 2. பசுவும் புலியும்
3. பஸ் 4. மேசைப் பந்து

04. கதையொன்றில் காணப்படும் முக்கியம்சம் எது?
1. பாடல் 2. ஆடல்
3. மேடைக் குறிப்பு 4. கரு

05. கோயில் பூசகர் ஒருவரின் வேட உடையாக அமைவது,
1. சாரம் 2. கோட் சூட்
3. வேட்டி, சால்வை 4. காற்சட்டை

(5X2=10 புள்ளிகள்)

➢ **பொருத்தமான சொல்லை வைத்து இடைவெளி நிரப்புக.**
(நடிகன், காவடி, ஊமம், நாடகாசிரியர், கோழிகோட்டான்)

06. வாய் மொழியற்ற நடிபாகத்தை சித்திரிப்பது ..... ஆகும்.

07. அரங்கின் பிரதான மூலகம் ..... ஆவான்.

08. நாடகத்தை எழுதுபவர் ..... என அழைக்கப்படுவார்.

09. பாரம்பரிய நடன வடிவம் ..... ஆகும்.

10. அரங்க விளையாட்டுக்களில் .....ஒன்றாகும். (5X2=10 புள்ளிகள்)

www.lkedu.lk

➢ **சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) பிழை எனவும் இடுக.**

01. நாடகத்தில் நடிகன் முக்கியமானவன் ஆவான். ( )

02. "பிள்ளை அழுத கண்ணீர்" ஓர் சிறுவர் நாடகம் ஆகும். ( )

03. நாடகத்திற்கு ஒப்பனை அவசியம் இல்லை. ( )

04. "ஆடும் வீடும்" ஓர் அரங்க விளையாட்டாகும். ( )

05. சூரன் போர் நிகழ்த்தப்படுவது மேடையில் ஆகும். ( )

(5X2=10 புள்ளிகள்)

➢ **தொடர்புபடுத்துக.**

1.	கலாநிதி.சி.ஜெயசங்கர்	தோற் கருவி
2.	கிராமிய விளையாட்டு	பஞ்சவர்ண நரியார்
3.	சிறுவர் நாடகம்	அரங்கக் கைப்பொருள்
4.	மிருதங்கம்	சிறுவர் நாடகாசிரியர்
5.	வாள்	கிட்டிப்புல்லு

(5X2=10 புள்ளிகள்)

www.lkedu.lk

பகுதி-II

➢ **பின்வரும் வினாத் தொகுதிகளில் 5 வினாக்களுக்கு விடை தருக.**

01. நீர் வகுப்பறையில் கற்ற சிறுவர் நாடகப் பாடல் அல்லது மரபுவழி நாடகப் பாடல் ஒன்று எழுதுக.
(12 புள்ளிகள்)

02. 1. கதைகளின் வகைகள் 3 தருக.
2. நீர் வாசித்த கதைகளின் தலைப்புக்கள் 3 தருக.
3. கதைகளை நாம் வாசிப்பதால் நாம் கற்றுக்கொள்ளும் விடயங்கள் 4 தருக.

(3+3+6=12 புள்ளிகள்)

03. 1. அரங்க விளையாட்டு என்றால் என்ன?
2. உமக்குத் தெரிந்த அரங்க விளையாட்டுக்கள் 5 தருக.
3. அவ் விளையாட்டுக்களில் ஒன்று விளையாடும் முறையை விபரிக்குக.

(2+5+5=12 புள்ளிகள்)

04. 1. வேடமுகம் ஒன்று செய்யத் தேவையான பொருட்கள் 4 தருக.
2. வேடமுகம் செய்யும் படிநிலையைத் தருக.
3. வேடமுகம் ஒன்றின் பருமட்டான படம் வரைக.

(4+4+4=12 புள்ளிகள்)

5) 1. "பிள்ளை அழுத கண்ணீர்" என்ற நாடகத்தின் கரு யாது?
2. "பிள்ளை அழுத கண்ணீர்" நாடகத்தில் வரும் பாத்திரங்கள் 4 தருக.
3. இந் நாடகத்தை கற்பதால் நாம் அறிந்துகொள்ளும் படிப்பினைகள் 3 தருக.

(2+4+6=12 புள்ளிகள்)

6) 1. நாட்டுப்புறக் கலை வடிவங்களாகக் கொள்ளப்படுபவை எவை?
2. கிராமிய நடன வடிவங்கள் 3 தருக.
3. 'கும்மி' ஆடப்படும் முறையைத் தருக.

(3+3+6=12 புள்ளிகள்)

www.lkedu.lk